செய்தி வெளியீடு எண்: 521 நாள்:21.08.2019

## செய்தி வெளியீடு

அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் சார்பில் 21.08.2019 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 01.09.2019 நடைபெற உள்ள தொகுதி IV தேர்வு எழுத இருக்கும் தேர்வர்கள் பயன்பெறும் வகையில் ஒரு நாள் இலவச ஊக்க முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமினை தமிழக அரசு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தலைமை ஏற்று குத்துவிளக்கு ஏற்றி தலைமை உரையாற்றினார். இந்நிகழ்வில் தேர்விற்கு தயாராக உள்ள மாணவர்களை ஊக்கப்படுத்தி எளிய முறையில் தேர்வுகளை எதிர்நோக்கும் வகையில் அறிவுரைகளை வழங்கியும், கையேடுகளை தேர்வர்களுக்கு வழங்கியும் சிறப்பித்தார்.

அமைச்சர் அவர்கள் வேதியியல், இயற்பியல், விலங்கியல், நாட்டு நடப்பு போன்றவற்றில் தேர்வர்களுக்கு வினாடி – வினா நிகழ்ச்சி போலக் கேள்வி கேட்டு, சரியான விடையளித்தவர்களைப் பாராட்டி அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் சொந்த சார்பில் பரிசுத் தொகை வழங்கினார்கள். பல தேர்வர்கள் துல்லியமான விடையை அளித்துத் தேர்வுக்குத் தயாராக இருப்பதை உணர்த்தினார்கள். இக்கலந்துரையாடல் நிகழ்வால் அரங்கம் கலகலப்பானது.

அதனைத் தொடர்ந்து கூடுதல் தலைமைச் செயலாளர் / இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் போட்டித் தேர்வுகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அரசு செயலாளர் மருத்துவர் திருமதி. சீ. ஸ்வர்ணா, இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை செய்தியில் இப்பயிற்சி மையத்தின் வாயிலாக பயிற்சி பெற்றவர்களில் தேர்வு பெற்றவர்கள் பல்வேறு துறையில் சிறப்புடன் பணியாற்றி வருவது போல் தற்போதைய பயிற்சியாளர்களும் தேர்வு பெற்று சிறப்புடன் பணியாற்ற வாழ்த்துரை வழங்கினார்.

இம்முகாமில் தேர்வர்களை ஊக்குவிக்க முனைவர் வீ.பி. ஜெயசீலன், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர், தூத்துக்குடி, முனைவர் ஜே. ஸ்டெல்லா, முதல்வர் (மு.கூ.பொ), போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம், திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., சார் ஆட்சியர், இராணிப்பேட்டை, திரு. த. அருணாச்சலம், கணக்கு அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் ஆகியோர் ஊக்க உரை ஆற்றி தேர்வர்கள் பயன்பெறும் வகையில் தொகுதி IV தேர்வுகளுக்கான முக்கிய குறிப்புகளையும், பாட நுணுக்கங்களையும் எளிதில் புரிந்து கொண்டு குறைந்த நேரத்தில் பதில் அளிக்கும் திறன் மேம்பாடு குறித்தும், தேர்வுகளை பற்றிய பயத்தினை போக்கிக் கொள்ளும் வழிமுறைகளையும் ஊக்கமுடன் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளையும் விரிவாக எடுத்துரைத்தனர். இம்முகாமில் சுமால் 1200–க்கும் மேற்பட்ட தேர்வர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இம்முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் தொகுதி IV தேர்வுக்கு தங்களை தயார் செய்து கொள்ளும் வகையில் பாடத்திட்டம், அனைத்துப் பாடங்களுக்கான மாதிரி வினாக்கள், முந்தைய ஆண்டு தொகுதி IV கேள்வி பதில்கள் தொகுத்த கையேடு, குறிப்பு நோட்டு அடங்கிய பைல் மற்றும் மதிய உணவு, தேநீர் வழங்கப்பட்டது.

மேலும், விழாவின் நிறைவாக அண்ணா மேலாண்மை நிலைய கூடுதல் இயக்குநர் / கூடுதல் பயிற்சித் துறைத் தலைவர் திருமதி ச. ஷோபா அவர்கள் நன்றி உரை ஆற்ற ஊக்க முகாம் இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**